# வெள்ள அபாய எச்சரிக்கை

சென்னையின் குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்றான சத்தியமூர்த்தி சாகர் நீர்த்தேக்கம், பூண்டி 34.58 சதுர கி.மீ. பரப்பளவில் திருவள்ளூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டத்தில் அமைந்துள்ளது. நீர்த்தேக்கத்தின் நீர் மட்ட மொத்த உயரம் 35 அடியாகும். இதன் முழு கொள்ளளவு 3231 மில்லியன் கன அடியாகும். இன்று **(28.11.2021) பிற்பகல் 2.00 மணி** நிலவரப்படி நீர் இருப்பு 34.07 அடியாகவும், கொள்ளளவு 2845 மில்லியன் கன அடியாகவும் உள்ளது, நீர் வரத்து 9900 கன அடியாக உள்ளது. தற்போது அணையிலிருந்து வினாடிக்கு 7000 கன அடி திறக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை தீவிரமாக பெய்து வருவதால் வெள்ள உபரி நீர் கூடுதலாக அணைக்கு வந்த கொண்டுள்ளதாலும் நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்து வருவதாலும் கூடுதலாக இன்று (28.11.2021) பிற்பகல் 4.00 மணி அளவில் வினாடிக்கு 8000 கன அடியாக உயர்த்தி திறக்கப்படவுள்ளது. நீர்த்தேக்கத்திற்கு வரக்கூடிய நீர்வரத்து தொடர்ந்து அதிகபடியாகும் நிலையில் கூடுதல் உபரி நீர் படிப்படியாக திறக்கப்படும்.

எனவே நீர்த்தேக்கத்திலிருந்து மிகை நீர் வெளியேறும் கொசஸ்தலையாறு செல்லும் கிராமங்களான நம்பாக்கம், கிருஷ்ணாபுரம், ஆட்ரம்பாக்கம், ஒதப்பை, நெய்வேலி, எறையூர், பீமன்தோப்பு, கொரக்கந்தண்டலம், சோமதேவன்பட்டு, மெய்யூர், வெள்ளியூர், தாமரைப்பாக்கம், திருக்கண்டலம், ஆத்துர், பண்டிக்காவனூர், ஜெகநாதபுரம், புதுகுப்பம், கன்னிப்பாளையம், வன்னிப்பாக்கம், அசூவன்பாளையம், மடியூர், சீமாவரம், வெள்ளிவாயல்சாவடி, நாப்பாளையம், இடையான்சாவடி, மணலி, மணலி புதுநகர், சடையான்குப்பம், எண்ணூர் மற்றும் கொசஸ்தலையாற்றின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர்களுக்கு எச்சரிக்கை இருக்குமாறு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.